**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8064871

1. District : மாவட்டம் **கடலூர்** | PS: காவல் நிலையம் **[illegible]க. பிரிவு** | Year: ஆண்டு **2019** | FIR No.: மு.த.அ. எண் **13/2019** | Date: நாள் **06.12.2019**

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: **இந்திய தண்டனை சட்டம்** | Sections பிரிவுகள்: **167, 468, 471, 420, 477(A), 409 r/w 109**
   (iii) Act சட்டம்: **ஊழல் தடுப்பு சட்டம் 1988** | Sections பிரிவுகள்: **12 r/w 13(2), 13(1)(c)**
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் **2011 ஆம் ஆண்டு முதல்** | Date to : நாள் வரை **2016 ஆம் ஆண்டு வரை**
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **16.04.2018** | Time : நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **கணினி தட்டச்சு மூலம்**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி **ஈச்சம்பூண்டி கிராம ஊராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகள் தென்மேற்கு சுமார் 90 கி.மீ.**
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **N.ஜோதி** | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **நடராசன்**
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **56 வயது** | (d) Nationality : நாட்டினம் **இந்தியன்** | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் **விவசாயம்** | (g) Address : முகவரி **வினாயகர் கோயில் தெரு, ஈச்சம்பூண்டி கிராமம், காட்டுமன்னார்கோயில் வட்டம், கடலூர் மாவட்டம்.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   **1) S.பரமேஸ்வரன், வயது 49, த/பெ, A. சிங்காரவேல், முன்னாள் தலைவர், ஈச்சம்பூண்டி ஊராட்சி,**
   **2) S.கண்ணன், வயது 44, த/பெ, G. சாமிதுரை, முன்னாள் துணைத்தலைவர், ஈச்சம்பூண்டி ஊராட்சி, காட்டுமன்னார்கோயில் ஒன்றியம், கடலூர் மாவட்டம்.**
   **3) C.பாலமுருகன், வயது 43, த/பெ, S. சின்னசாமி, ஊராட்சி செயலாளர், கால்நாட்டாம்புலியூர் ஊராட்சி, காட்டுமன்னார்கோயில் ஒன்றியம், கடலூர் மாவட்டம்.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   **முதல்நிலை விசாரணை நடத்தப்பட்டது. (PE 98/2018/MISC/CL)**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள், கடலூர், கடலூர் மாவட்டம் முன்பாக சமர்ப்பிக்கப்படுகிறது.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், ஈச்சம்பூண்டி கிராமம், விநாயகர்கோயில் தெருவை சேர்ந்த N.ஜோதி, த/பெ, நடராச உடையார் என்பவர் அளித்துக்கொண்ட புகார் மனுவின் அடிப்படையில், இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், சென்னை அலுவலக குறிப்பாணையின்படி, இப்புகார் மனுவின் மீது முதல்நிலை விசாரணை நடத்த PE98/2018/MISC/CL உத்தரவிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் முதல்நிலை விசாரணை பதிவு செய்யப்பட்டு, புகார் மனுவில் சொல்லப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் மீது, விசாரணை அலுவலரான த.சண்முகம், காவல் ஆய்வாளர்,

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

தகவல் கொடுத்தவருக்கு [illegible] நகல்
அஞ்சல் துறை பதிவு தபாலில் அனுப்பப்படும்.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

6.12.2019, 12.00 மணி

Name: பெயர் த. சண்முகம்
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
ஊ.த.க பிரிவு, கடலூர்.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர் ஆகிய என்னால் முதல்நிலை விசாரணை செய்யப்பட்டு, விசாரணையின் முடிவில் குற்றச்செயலுக்கான முகாந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. குற்ற வழக்கு பதிவு செய்ய தகுந்த அலுவலரிடம் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

இவ்விசாரணையின் விவரம் பின்வருமாறு :

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், காட்டுமன்னார்கோயில் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட ஈச்சம்பூண்டி கிராம ஊராட்சியில் கடந்த 2011 முதல் 2016 ம் ஆண்டு வரை (1)S.பரமேஸ்வரன், த/பெ, சிங்காரவேல், முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர், ஈச்சம்பூண்டி கிராம ஊராட்சி, காட்டுமன்னார்கோயில் ஒன்றியம், (2)S.கண்ணன், த/பெ, G.சாமிதுரை, முன்னாள் ஊராட்சிமன்ற துணைத் தலைவர், ஈச்சம்பூண்டி கிராம ஊராட்சி, காட்டுமன்னார்கோயில் ஒன்றியம் ஆகியோர் பொது ஊழியர்களாக ஈச்சம்பூண்டி கிராம ஊராட்சியில் பணிபுரிந்துள்ளனர். மேலும் காட்டுமன்னார்கோயில் ஒன்றியம், கால்நாட்டாம்புலியூர் கிராம ஊராட்சியில் தற்போது ஊராட்சி செயலராக பணிபுரிந்து வரும் (3) C.பாலமுருகன், த/பெ, சின்னசாமி என்பவர் இவ்விசாரணையில் மேற்சொன்ன ஈச்சம்பூண்டி கிராம ஊராட்சியில் நடைபெற்ற நிதி முறைகேடுகள் சம்மந்தமான ஊராட்சியின் ஆவணங்களை, தன் கைப்பட கணக்குகளை எழுதி பராமரித்துள்ளது குற்ற செயலுக்கான முகாந்திரத்தில் தெரிய வருகிறது. எனவே மேற்சொன்ன குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் 1 முதல் 3 வரை உள்ளவர்கள் அனைவரும் சட்டப்பிரிவு 2(C) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு சட்டம், 1988, (அமல்படுத்தப்பட்ட சட்டம்) 2018ன்படி பொது ஊழியர்கள் ஆவர்.

மேற்சொன்ன ஈச்சம்பூண்டி கிராம ஊராட்சியில் கடந்த 2011 முதல் 2016ம் ஆண்டு வரையில் நடந்த பல்வேறு நிதி முறைகேடுகள் மற்றும் கையாடல் விவரம் பின்வருமாறு:

(1) ஈச்சம்பூண்டி கிராம ஊராட்சியில் பராமரிக்கப்படும் நிதி கணக்கு எண்.3ன்படி கணக்கில் உள்ள நிதிகளை குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நபர்கள் 1 மற்றும் 2 கூட்டாக இணைந்து குற்றம் செய்யும் நோக்கில், ஊராட்சியின் வங்கி

காசோலைகளை கூட்டாக கையொப்பமிட்டும், ஊராட்சிக்கு சொத்துக்களை உருவாக்காமலும், ஊராட்சியின் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரின் நிதி விடுவிப்பு ஆணை உரிய முறையில் பெறாமலும், காசோலைகளை தனக்கு வேண்டிய நபர்களின் பெயரில் வழங்கி, வங்கியில் பணமாக்கப்பட்டும், செலவினத்திற்கு உரிய ஆவணங்கள், பதிவேடுகளை பராமரிக்காமலும், அரசுக்கு நிதி இழப்பீடு செய்த வகையில் **ரூ.1,64,375/-** ஆகும்.

(2) ஈச்சம்பூண்டி கிராம ஊராட்சியில் நடைபெற்ற மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தை 2014 முதல் 2016 வரை உள்ள நிதியாண்டுகளில் வேலை உறுதியளிப்பு திட்டத்தில் தவறான வகையில் பொய்யான கையொப்பம் மற்றும் கையெழுத்து இட்டு, முறையற்ற வகையில் கிராமத்தில் இல்லாத நபர்களின் பெயர்களில் சம்பளம் வழங்கப்பட்டுள்ளதை மேற்சொன்ன நிதியாண்டுகளுக்குரிய சமூக தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் 1 மற்றும் 2 கூட்டாக காசோலைகளில் கையொப்பமிட்டு, வேலை உறுதியளிப்பு திட்ட சம்பளம் **ரூ.3,53,002/-** கையாடல் செய்துள்ளனர்.

(3) ஈச்சம்பூண்டி கிராம ஊராட்சியில் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்திற்கு அரசால் உரிய முறையில் ஊராட்சியில் வறுமையில் உள்ள பெண்கள், பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர்கள், சுய உதவி குழுக்கள், சிறு கடைகளுக்கான கடன்கள் வழங்குவது மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடைய வேண்டி கடன்களை கொடுத்து முன்னேற்றம் அடைய செய்ய வேண்டிய நிதி **ரூ.2,80,000/-**த்தை மேற்சொன்ன எந்த குழுவினருக்கும் வழங்காமல் முழு தொகையையும் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் 1 மற்றும் 2 கூட்டாக காசோலைகளில் கையொப்பமிட்டும், உரிய ஆவணங்களை பராமரிக்காமலும் கையாடல் செய்துள்ளார்கள்.

(4) ஈச்சம்பூண்டி ஊராட்சியில் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தை கடந்த 2006 முதல் 2011 ம் ஆண்டு வரை மற்றும் 2011 முதல் 2016ம் ஆண்டு வரை முழு வீச்சில் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் 1 மற்றும் 2 ஆகியோர், தங்களுடைய பணிகாலமான 2011 முதல் 2016ம் ஆண்டுகளில், மேற்சொன்ன 2006 முதல் 2011 ம் ஆண்டு வரை இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளிகளின் கணவர் அல்லது மனைவி மற்றும் மனைவி அல்லது கணவர் பெயர்களில் தற்போது பயனாளிகளாக குறிப்பிட்டு, நிதி முறைகேடுகளை செய்துள்ளனர்.

(5) ஈச்சம்பூண்டி கிராம ஊராட்சியில் கடந்த 2013 முதல் 2014 ம் ஆண்டுகளில் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம் (5% Cyclone Scheme)ன்படி குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் 1 மற்றும் 2 ஆகியோர், தங்களுக்கு வேண்டிய நபர்களின் பெயர்களில் காசோலைகளை வழங்கியும், அக்காசோலைகளில் கூட்டாக கையொப்பமிட்டும், தன்னியக்க காசளிப்பு இயந்திரம் (Automated Teller Machine) மூலம் பணம் எடுத்துள்ளது சாட்சியங்களின் வாக்குமூலங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் **ரூ.8,16,758/-** ஐ இத்திட்டத்தின் மூலம் நிதி கையாடல் செய்திருப்பது தெரிய வருகிறது.

(6) கடந்த 2012 - 2013ம் ஆண்டுகளில் ஈச்சம்பூண்டி ஊராட்சியில் தானே வீடுகட்டு திட்டத்தின்படி மொத்தம் 155 வீடுகள் கட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது. இதில் 30 வீடுகள் பயனாளிகளுக்கு சொந்தமான மனையில் வீடுகட்டாமல், பிற நபர்களுக்கு சொந்தமான மனையில் வீடுகட்டியுள்ளார்கள். இது தவறு. மேலும், 6 பயனாளிகள் வீடுகளே கட்டாமல் முழு பணத்தையும் பெற்று பயனடைந்துள்ளார்கள். 11 பயனாளிகள் தங்கள் கட்டிட பணிகளுக்கு மீறிய அளவில் கூடுதலாக பண பலன் பெற்று பயனடைந்துள்ளனர். மீதமுள்ள 108 வீடுகளுக்கு தற்போதும் கட்டுமான பணி நடந்துக்கொண்டு இருப்பது தெரிய வருகிறது. எனவே குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் 1 மற்றும் 2 ஆகியோர் கூட்டாக மேற்சொன்ன தானே திட்ட பயனாளிகளை தேர்வு செய்தது முதல் பல்வேறு முறைகேடுகளில் பொறுப்பாகிறார்கள்.

மேற்சொன்ன குற்றச்சாட்டுகள் மீதான மொத்த நிதி கையாடல் **ரூ.16,14,135/-** ஐ குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் 1 மற்றும் 2 கூட்டாக இணைந்து காசோலைகளில் கையொப்பமிட்டும், வங்கிகளில் பணமாக மாற்ற உதவி புரிந்தும், ஊராட்சியில் ஆவணங்களை உரிய உத்தரவின்றி எழுதி பராமரித்த வகையில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் 3 உடந்தையாக இருந்து செய்ததும், குற்ற நிகழ்வுக்கு கூட்டாக குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் 1 முதல் 3 வரை பொறுப்பேற்கிறார்கள். எனவே இவர்கள் அனைவரும் தீங்கு ஏற்படுத்தும் எண்ணத்துடன், தவறான ஆவணத்தை உருவாக்கியும், ஏமாற்றும் நோக்கத்துடன் பொய்யாக பொய் ஆவணம் புணைந்தும், பொய்யாக புணையப்பட்ட ஆவணத்தை உண்மையானது என பயன்படுத்தியும், ஏமாற்றும் நோக்கத்துடன் நேர்மையின்றி தூண்டியும், பொது ஊழியரால் செய்யப்படும் குற்றமுறு நம்பிக்கை மோசடிக்கு உடந்தையாக இருந்து அரசுக்கு பண இழப்பு ஏற்படுத்தப்பட்டபடியாலும், குற்றமுறு கெட்ட நடத்தையை செய்யும் அரசு பணியாளர்களுக்கு உடந்தையாக இருந்தபடியாலும், அரசு பணியாளர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட சொத்தை நேர்மையற்ற முறையில் அல்லது மோசடியாகவோ அனுமதித்தபடியால் மேற்சொன்ன அனைவரும் சட்டப்பிரிவு 167, 468, 471, 420, 477A, 409 of IPC and r/w 109 of IPC and sec 12 r/w 13(2), r/w 13(1)(c) of Prevention of Corruption Act, 1988 ன்படி தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

இதன்படி இன்று 06.12.2019 தேதி, பகல் 11.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல், தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு வழக்கு), கடலூர் அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் நகல் காவல் கண்காணிப்பாளர், மேற்கு சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மற்றொரு நகல் வழக்கின் கோப்பில் வைக்கப்பட்டது.

6.12.19

தி. கிருஷ்ணன்,
காவல் ஆய்வாளர்,
ஊதக பிரிவு, கடலூர்.